**தமிழியல் துறை**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**செய்திக் குறிப்பு**

திறனாய்வாளர் பேராசிரியர் தி.சு. நடராசன் அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் திறனாய்வாளர் - செம்மல் - விருது அறிவிப்பு

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் திறனாய்வாளர், பேராசிரியர் தி.சு. நடராசன் அவர்கள் "திறனாய்வாளர், பேராசிரியர் தி.சு. நடராசன் அறக்கட்டளை" ஒன்றை நிறுவியுள்ளார். இவ்வறக்கட்டளையின் வழி ஆண்டுதோறும் சிறந்த தமிழ்த் திறனாய்வாளர் ஒருவரைத் தேர்வு செய்து ரூபாய் 15,000ஃ- பணமுடிப்புடன் திறனாய்வாளர் செம்மல் என்னும் விருதும் வழங்கப்பட உள்ளது. 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சிறந்த திறனாய்வாளரைத் தெரிவு செய்து ஜூலை மாதத்தில் விருது வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தகுதியானத் திறனாய்வாளர்களைத் திறனாய்வாளர் செம்மல் விருதுக்குக் கீழ் குறிப்பிடும் நெறிமுறைகளின் அடிப்படையில் 30.06.2026க்குள் பரிந்துரைத்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

1. திறனாய்வாளர் - செம்மல் எனும் இந்தப் பரிசுக்குரியவர், தமிழ் இலக்கிய உலகில் ஒரு சிறந்த திறனாய்வாளராகவும், பரந்துபட்ட அங்கீகாரம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

2. யாதாயினும் ஒரு கோட்பாட்டைச் சீர்மைபெற விளக்கும் வகையிலோ, ஒரு கோட்பாட்டைப் பொருத்தத்துடன் பயன்படுத்தி ஆய்வு செய்த வகையிலோ, இன்றைய இலக்கியத் தளங்களில் ஆழங்கால்பட்டுத் தெளிவுடன் ஆராய்ந்த வகையிலோ, பழைய இலக்கியங்களில் புதிய ஒளிகளைப் பாய்ச்சுகிற வகையிலோ, பிற நூல்களில்ஃஆய்வுகளில்

மேற்கோள் காட்டப்படுகிற தகுதியுடன் ஒன்றிற்கு மேற்பட்ட நூல்களையும் இலக்கிய இதழ்களில் அல்லது ஆராய்ச்சி இதழ்களில் பெயர் சொல்லத்தக்க கட்டுரைகளையும் வெளியீடுகளையும் செய்திருப்பவர் இப்பரிசுக்குத் தகுதியுடையவர் என்று கருதலாம்.

3. தகுதிக்குரியவரின் தன் விபரக்குறிப்பு, வெளியீடுகளின் பட்டியல் இவ்விருதுக்கானத் தகுதிக்குரிய காரணங்களையும் குறிப்பிட்டுப் பரிந்துரை அமைய வேண்டும்.

4. ஒருவர் இருவரைப் பரிந்துரை செய்யலாம். தங்களது பரிந்துரை இரகசியமாக இருப்பது வரவேற்கத்தக்கது.

5. பரிந்துரைக்கப்படுபவர்களின் பட்டியல் தேர்வுக்குழுவுக்கு அனுப்பப்பட்டு ஒருவர் தெரிவு செய்யப்படுவார். தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

6. பரிந்துரைக்கப்படுபவரின் பெயர், முகவரி, விருதுக்குத் தகுதியாகக் கருதப்படும் பங்களிப்பு, பரிந்துரைப்புக்கான காரணங்கள், வெளியீடுகளின் பட்டியல் பரிந்துரைப்பவரின் பெயர், முகவரி ஆகிய தகவல்களுடன் பரிந்துரை அமைய வேண்டும்.

7. தகுதியானவர்களின் பரிந்துரையை 30.06.2026 க்;குள் தமிழியல் துறைத்தலைவர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி – 12. என்ற முகவரிக்கு அனுப்பப்பெற வேண்டும்.

இதனைப் பல்கலைக்கழகப் பதிவாளர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.